**Starting Time : 4.39 p.m.**

**09.02.2026 அசல் வழக்கு எண்.111/2007 மற்றும் அசல் வழக்கு எண்.76/2008**

**பி.வா.சா.1 திரு. ஆனந்தன் த/பெ. செல்வராஜ்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1**). இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி இராமகிருஷ்ணன் என்பவர் அவரது சொத்தை பொறுத்து பொது அதிகார ஆவணம் எழுதியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதி சொத்தை விற்பனை செய்வதற்காக தான் பணம் வாங்கிக் கொண்டு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் அது பற்றி தெரியாது. என் மீது இந்த வழக்கின் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ள விவரத்தை மேற்படி 1ம் பிரதிவாதி இராமகிருஷ்ணனிடம் தெரிவித்து மேற்படி பிரச்சனையை தீர்த்துவிடுமாறு கேட்டுக் கொண்டேனா என்றால் கேட்டுக் கொண்டேன்.

**2**). தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதி இராமகிருஷ்ணன் 5ம் பிரதிவாதி மேகநாதன் என்பவருக்கு கிரய உடன்படிக்கை எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிரய உடன்படிக்கை தொகை ரூ.1,84,800/-என குறிப்பிட்டு கடந்த 04.06.2004ஆம் தேதி முன் அட்வான்ஸ் தொகையாக ரூ.1,00,000/-ஐ 1ம் பிரதிவாதி இராமகிருஷ்ணன் 5ம் பிரதிவாதி மேகநாதன் என்பவரிடமிருந்து பெற்றுக் கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மீதி கிரய உடன்படிக்கை தொகை ரூ.84,800/-ஐ மேகநாதன் என்பவர் இராமகிருஷ்ணன் என்பவருக்கு செலுத்தும்பட்சத்தில் கிரயம் செய்துக் கொடுப்பதாக கூறினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**3**). மேற்படி கிரய உடன்படிக்கையின்படி, 1ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு கடந்த 16.06.2004ல் சில சொத்துக்களை கிரயம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி கிரய ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் மகன் 2ம் பிரதிவாதி அதில் ஒரு தரப்பினராக கையெழுத்து செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு தாக்கல் செய்த பிறகு மேற்படி கிரய உடன்படிக்கை மற்றும் கிரய ஆவணம் பற்றி நான் எனது எதிர்உரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ மறுத்து தெரிவித்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

**Ending time : 4.50 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.